மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

<u>அசல் வழக்கு எண்.195/2007</u>

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 05.03.2024 ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ) அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கராசு | தொழில் | |
| த/பெ | சுப்பிரமணியம் | ஊர் | |
| வயது | | தாலூாக்கா | பல்லடம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05-03-2024 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பில்)</u>

எனது தற்போது 27 வயதாகிறது. நான் வெல்டிங் ஒர்க்ஷாப்பில் வேலைக்கு செல்கிறேன். நான் டிப்ளமோ முடித்துள்ளேன். திருமூர்த்தி கவுண்டர் எனது தாத்தா ஆவார். அவருக்கு மூன்று பெண் மக்கள் ஒரு ஆண் வாரிசுகள் ஆவார்கள். அவர்கள் ராஜலட்சுமி, அங்கம்மாள், சுப்புலட்சுமி மற்றும் என் தந்தை சுப்பிரமணி ஆகியோர் ஆவர். என் தந்தை சுப்பிரமணியன் 5-11-2014 அன்று இறந்தார். என் தகப்பனாருக்கு நானும், என் தம்பியும் மட்டும வாரிசுகள் ஆவோம். என் தம்பிக்கு 18 வயதாகிறது. ராஜலட்சுமி எதற்காக இந்த வழக்கு போட்டுள்ளார் என்றால் எங்கள் சொத்தை ஏமாற்றி பெற வேண்டி வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்து மொத்தம் 3 ஏக்கர் 47 சென்ட் விஸ்தீரணம். அதன் காலை எண்கள்.255/2, 255/3, 253/1 ஏ ஆகும்.

(ஆவணங்களைப் பார்வையிட வேண்டும் என வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டிக் கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது. )

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ)